# 09

## ஸகாத்

‘‘(அல்லாஹ் எந்த சொத்து செல்வங்களுக்கு) உங்களை (உரிமையுடைய) பிரதிநிதிகளாக ஆக்கியுள்ளானோ அவற்றிலிருந்து செலவு செய்யுங்கள்’’அல்குர்ஆன் 57:07).




உலகின் சொத்து செல்வங்களுக்கு சொந்தக்காரன் அல்லாஹ் ஒருவனே. அவற்றிலிருந்து அவன் விரும்புகின்ற சிலருக்கு அதிகமாகக் கொடுக்கின்றான்; வேறு சிலருக்குக் குறைவாகக் கொடுக்கின்றான். எவருக்கு அல்லாஹ் சொத்து செல்வங்களை அதிகமாகக் கொடுத்திருக்கின்றானோ அவர்களை நாம் ‘செல்வந்தர்’ என்று அழைப்போம்.

ஒருவருடைய செல்வம் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவை அடையும்போது, அதிலிருந்து குறித்த பிரிவினருக்கு குறித்த அளவு வழங்க வேண்டும். இதுவே ஸகாத் என்று அழைக்கப்படுகின்றது.

ஸகாத் என்ற அறபுச் சொல்லுக்கு ‘வளர்ச்சி’, அபிவிருத்தி, தூய்மை என்ற பொருள்கள் உண்டு. இவை ஸகாத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதாக உள்ளன.

ஸகாத் ஒரு வணக்கமாக விளங்குகின்ற அதேவேளை, கொடுப்பவரது செல்வத்துக்குப் பாதுகாப்பாகவும் பெறுபவரின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது. மேலும், ஸகாத் ஏழைகள் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக செல்வந்தர் வழங்குகின்ற தர்மம் அல்ல; செல்வந்தரின் சொத்து, செல்வத்தில் ஏழைகளுக்கு இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட பங்காகும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

‘‘அவர்களின் செல்வங்களில், கேட்டு வருகின்ற ஏழைகளுக்கும் கேட்காமல் (வெட்கப்பட்டு) இருக்கின்றவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு’’ (அல்குர்ஆன் 51:19).

ஸகாத்தினால் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

- ஸகாத்தின் முக்கியத்துவத்தை குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன. அதனைச் செய்வதால் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிப்பட்டவராவோம்.
- ஸகாத்தின் மூலம் அல்லாஹ்வின் அருளும் நற்கூலியும் கிடைக்கின்றன.
- ஸகாத்தை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.
- ஸகாத்தின் மூலம் அல்லாஹ் செல்வத்தை வளர்ச்சியடையச் செய்கிறான்.
- முறையாக ஸகாத் கொடுக்காதபோது எதிர்பாராத நஷ்டங்களும் கஷ்டங்களும் ஏற்படுகின்றன.
- ஸகாத் கொடுப்பவருக்கு ஏழைகளின் அன்பு, ஆதரவு, துஆ என்பன கிடைக்கின்றன. இதன் காரணமாக வரவிருக்கின்ற ஆபத்துக்கள், பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன.

**'ஸகாத்தும்' ஸதகாவும் ஒன்றல்ல**



நபி ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் ''ஸதகா செய்வதால் செல்வம் குறைவடைவதில்லை'' (ஆதாரம்: திர்மிதி).

''உனது சகோதரனின் முகத்தைப் பார்த்துப் புன்னகைப்பதும் ஸதகாவாகும்''. (முஸ்லிம்)

'ஸதகா' என்ற சொல் எல்லா வகையான தர்மத்தையும் குறிக்கும். ஒருவர் தனது சொல், செயல், பொருள், கல்வி மற்றும் பணம் என்பவற்றின் மூலமாகவும் ஸதகா செய்யலாம். ஸதகாவை எப்போதும் எவ்வேளையிலும் எந்த அளவும் எவருக்கும் வழங்க முடியும்.

ஆனால் ஸகாத்தை குர்ஆன் குறிப்பிடுகின்ற பிரிவினருக்கு மாத்திரமே கொடுக்க முடியும். இதனை கீழ்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

''ஸகாத் எனும் தர்மங்கள் பக்கீர்களுக்கும், மிஸ்கீன்களுக்கும், அதற்கான (செயற்பாட்டில்) வேலையில் ஈடுபடுவோருக்கும், இஸ்லாத்தின் பால் உள்ளங்கள் இணக்கமானோருக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கி இருப்போருக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் போராடுவோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் (உரித்தானதாக) அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். அல்லாஹ் மிக அறிந்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கின்றான்'' (அல்குர்ஆன் 9:60).

மேற்படி எட்டுப் பிரிவினரையும் பற்றித் தனித்தனியாக, சுருக்கமாக நோக்குவோம்.

**பக்கீர்:** உழைப்போ வருமானமோ இல்லாததன் காரணமாக வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கும் பரம ஏழை. தனது அன்றாட அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கஷ்டப்படுபவர்.

**மிஸ்கீன்:** தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலையிலுள்ள சொற்ப வருமானத்தை உடையவர்.

**ஆமிலீன்:** ஸகாத் பணியில் ஈடுபட்டிருப்போரை இது குறிக்கும். ஸகாத்தை திரட்டுதல், பாதுகாத்தல், பதிவு செய்தல், கணக்குப் பார்த்தல், விநியோகம் செய்தல் போன்ற பணிகளில் இவர்கள் ஈடுபடுவர்.

**முஅல்ல.ஃ.பதுல் குலூப்:** புதிதாக இஸ்லாத்தை தழுவியோரையும், இஸ்லாம் பற்றி நல்லெண்ணம் கொண்டுள்ள, அதன் பால் இணக்கமாக இருப்போரையம் இது குறிக்கும்.

**ரிகாப்:** விடுதலை பெறுவதற்காக உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்.

**காரிமூன்:** ஆகுமான காரியங்களுக்காகக் கடன்பட்டு அதனை அடைக்க வசதியற்றிருப்பவர்கள்.

**ஃ.பீ ஸபீலில்லாஹ்:** அல்லாஹ்வின் திருப்தியை நாடி அவனுடைய மார்க்கத்தை நிலை நாட்டுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரை இப்பதம் குறிக்கும்.

**இப்னு ஸபீல்:** 'பாதையின் மைந்தன்' என்பது இதன் நேரடிப் பொருளாகும். அனுமதிக்கப்பட்ட பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் கஷ்டங்களை எதிர்நோக்குவோரை இது குறிக்கின்றது. அகதிகள் மற்றும் அநாதரவானோரும் இப்பிரிவில் அடங்குவர்.

பக்கீர், மிஸ்கீன் ஆகிய இரு பிரிவினரும் பொருளாதாரக் கஷ்டத்துக்குள்ளாகி இருப்பவர்கள். ஸகாத்தின் அடிப்படை நோக்கம் மனிதரின் வறுமையையும் கஷ்டத்தையும் போக்க உதவி புரிவதாகும். இதன் அடிப்படையில் இவர்கள் ஸகாத் பெற தகுதியானோரில் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

ஸகாத்தை சேகரித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபடுகின்ற 'ஆமிலீன்' பற்றிக் குறிப்பிடப்படுவதிலிருந்து, ஸகாத்தை கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது.

'உள்ளம் இஸ்லாத்தின் பக்கம் இணக்கமானோர்' என்பது, புதிதாக இஸ்லாத்தை ஏற்றிருப்போரைக் குறிக்கும். இவர்கள் தமது அனைத்து உறவுகளையும் சொத்து செல்வங்களையும் விட்டு விட்டு இஸ்லாத்துக்கு வந்தவர்களாக இருக்கலாம். இதன் காரணமாக நிர்க்கதிக்குள்ளாகி இருக்கும் இவர்களுக்கு உதவும் பொருட்டு ஸகாத்திலிருந்து ஒரு பகுதி வழங்கப்படும். ஆனால், வாழ்நாள் முழுவதும் இவர்களுக்கு ஸகாத் உதவி வழங்கப்பட வேண்டும் என்பது கருத்தல்ல. மற்றும் இஸ்லாத்தின்பால் கவரப்பட்டிருப்போரும் இதில் அடங்குவர்.

கடன்பட்டு அதனை அடைக்க முடியாமல் கஷ்டப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இவர்களில் பலர் வாழ்க்கையை வெறுத்து வணக்க வழிபாடுகளில் கூட ஈடுபட முடியாத நிலையில் வாழ்பவர்கள். இவர்களும் ஸகாத் பெற தகுதியானவர்கள். இருப்பினும்,



இயன்றவரை கடன்படாமல் வாழுமாறும், கடன்பட்டு விட்டால் முடிந்தவரை அவசரமாக கடனைத் திருப்பி ஒப்படைத்து விடுமாறும் இஸ்லாம் போதனை செய்கின்றது.

இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும் அதன் போதனைகளைப் பரவச் செய்வதற்காகவும் முயற்சிப்போர் யாவரும் ஃபீ ஸபீலில்லாஹ் என்ற பிரிவில் அடங்குவர்.

தமது சொந்த ஊரில் வசதியானவர்களாக இருப்பினும், பிரயாணத்தின்போது இழப்புக்களையோ விபத்துக்களையோ சந்தித்ததன் காரணமாக கஷ்டத்துக்கு உள்ளாகி இருப்போர் இப்னு ஸபீல் என்ற பிரிவில் அடங்குவர். இவர்களும் ஸகாத் பெறத் தகுதியானவர்கள் என்பதைக் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இப்போது நீங்கள், ஸகாத் பெறத் தகுதியான எட்டு பிரிவினர் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். அதேவேளை ஸகாத் பெறுவதற்கு தகுதியற்றோரைப் பற்றியும் நீங்கள் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள்:-

**முஸ்லிம் அல்லாதவர்கள்:** பொதுவாக முஸ்லிம் அல்லாதவருக்கு ஸகாத் நிதி வழங்கப்படுவதில்லை. ஆனால், இஸ்லாத்தின் பக்கம் நெருக்கமானோராகவும், அவர்களது உள்ளம் இஸ்லாத்தின்பால் இணக்கமானோராகவும் இருந்தால் ஸகாத்தின் ஒரு பகுதியை 'முஅல்லஃபதுல் குலூப்' என்ற அடிப்படையில் அவர்களுக்கு வழங்கலாம்.

**பணக்காரர்:** வசதிபடைத்தவர்களை நாம் பணக்காரர் அல்லது செல்வந்தர் என்று அழைப்போம். இவர்கள் ஸகாத் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். இத்தகையோர் பிறரிடமிருந்து ஸகாத் பெற அருகதையற்றவர்களாவர்.

**அடிமை:** இவர்கள் தமது எஜமானின் கட்டுப்பாட்டிலும் பாதுகாப்பிலும் உள்ளவர்கள். எத்தகைய சுதந்திரமும் இல்லாதவர்கள். இவர்களுக்கு ஸகாத் நிதியிலிருந்து உதவினால் இது அவர்களின் கைக்குச் சென்றடைய மாட்டாது. இதன் காரணமாக இவர்கள் ஸகாத் பெறும் தகுதியை இழந்துள்ளனர்.

**ஹாஷிம் முத்தலிப் குடும்பத்தவர்:** இவர்கள் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஸகாத் வழங்கக் கூடாது என்று ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன.

**ஸகாத் கொடுப்பவரால் தாபரிக்கப்படுவோர்:** இவர்கள் ஸகாத் கொடுக்கக் கடமைப்பட்ட ஒருவருடைய நேரடி பராமரிப்பில் வாழ்வோர். உதாரணமாக, ஸகாத் கொடுப்பவரின் பெற்றோர் மனைவி, மக்கள் இதில் அடங்குவர்.

**பயிற்சி:**

1. தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| ஆமிலீன் | தர்மம் |
| ஸகாத் | பரம ஏழை |
| ஸதகா | தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பவர் |
| பக்கீர் | ஸகாத் பணியில் ஈடுபடுவோர் |
| மிஸ்கீன் | இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்று |

**செயற்பாடு:**

1. உமது பகுதியில் எவ்வாறு ஸகாத் பங்கீடு செய்யப்படுகின்றது என்ற தகவலைத் திரட்டி எழுதுக.